# தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம்
# இருபத்தொன்றாவது பட்டமளிப்பு விழா

**மாண்புமிகு தமிழகத் துணை முதலமைச்சர்**
**திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின்**
**பட்டமளிப்பு விழா உரை.**

**சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு**
**விழா அரங்கம்**
**நாள்**: 8.1.2011 மாலை 4.30 மணி

**செ. கு. எண்: 05** **நாள்**:08.01.2011

# <u>தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம்</u>
# 21- <u>வது பட்டமளிப்பு விழா</u>

- மேதகு தமிழக ஆளுநர் - பல்கலைக்கழக வேந்தர் திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களே!
- மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், இணைவேந்தர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களே!
- துணைவேந்தர் டாக்டர் மயில் வாகனன் நடராசன் அவர்களே!
- ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்களே!
- பேராசிரியப் பெருமக்களே!
- மருத்துவத் துறை நண்பர்களே!
- பட்டம் பெறும் பாசமிகு நண்பர்களே!
- பத்திரிக்கை - தொலைக்காட்சித் துறை நண்பர்களே!
  அனைவருக்கும் வணக்கம்.

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தின், 21-வது பட்டமளிப்பு விழாவில், கலந்துகொண்டு உரையாற்றுகின்ற வாய்ப்பைப் பெற்றமைக்கு, பெருமைப்படுகிறேன்.

**1988–**ல் துவங்கப்பட்ட இந்த மருத்துவப் பல்கலைக்கழகம், இன்று வரை மிகச் சிறப்பாக இயங்கி, பல திறமை மிக்க மருத்துவர்களை நம் நாட்டிற்கு உருவாக்கியுள்ளது என்பதை எண்ணும் போது, மிகுந்த மன மகிழ்ச்சி அடைகிறேன்.

இப்பல்கலைக்கழகத்தில் இணைந்துள்ள, சுமார் **325**க்கும் மேற்பட்ட, அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில், மருத்துவம், பல்மருத்துவம், இந்திய மருத்துவம், செவிலியர், மருந்தியல் மற்றும் மருத்துவம் சார்ந்த கல்விகள், பட்டம் மற்றும் பட்ட மேற்படிப்பு, பட்டயப் படிப்பு என்ற வகையில் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த அனைத்து கல்விக் கூடங்களிலிருந்தும், இன்று பட்டம் பெறுபவர்களின் எண்ணிக்கை 5135 பேர். அதிலே இங்கு நேரிலே வந்து பட்டம் பெற்றுக் கொள்பவர்களின் எண்ணிக்கை 1805 பேர்.

இந்த நூற்றாண்டுகளின் வளர்ச்சியின் குறிக்கோள், அதன் முக்கியத்துவம் யாதெனில், கல்வியும்- சுகாதாரமும் என்றுதான் கூற வேண்டும். எந்த ஒரு நாடும், சுகாதாரக் கல்வியைப் புறக்கணித்துவிட்டு, வளர்ச்சிப் பாதையில் முன்னேறிவிட முடியாது!

இந்திய நாடு, விடுதலை பெற்றதிலிருந்து பல துறைகளில், சாதனைகளைப் புரிந்துள்ளது. இந்தியாவில், சுகாதாரத் துறை பல கடுமையான சோதனைகளை, சவால்களைச் சந்திக்க வேண்டியிருந்தது; தமிழ்நாடும், அதற்கு விதிவிலக்கு அல்ல!

ஆனால் இன்றைக்குத் தமிழ்நாட்டில் சுகாதாரத் துறை மிகப்பெரும் வளர்ச்சியைப் பெற்றுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில், மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை, பன்மடங்கு அதிகரித்துள்ளது.

பட்டம் பெறுகின்ற நீங்கள், மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தபோது, நீங்களும் உங்கள் பெற்றோர்களும், மருத்துவத் தொழிலைப்பற்றி உயர்வாகக் கருதினீர்கள்! உங்களுடைய நோக்கம், குறிக்கோள், இந்தச் சமுதாயத்திற்குச் சேவை செய்ய வேண்டும்; குறிப்பாகச் சமுதாயத்தில்

புறக்கணிக்கப்பட்டு, தாழ்ந்துகிடக்கின்ற அடித்தட்டு மக்களுக்குச், சேவை செய்ய வேண்டும் என்பதாகத்தான் இருந்தது.

வாழ்வாதாரமும், காலமாற்றங்களும், சூழ்நிலைகளும், மனிதரின் கொள்கைகளை, எண்ணங்களை விழுங்கிவிடுகின்றது. எனவே அந்த உறுதி, இன்றைக்கு அவ்வளவு பேரிடமும் அப்படியே இருக்குமா! என்றால்? கேள்விக் குறிதான். ஆனால், பலரில் சிலருக்காவது அந்தக் குறிக்கோள் இன்றைக்கும் இருக்கக்கூடும்.

இன்றைக்கு, இந்த உலகில் அவசரத் தயாரிப்பு உணவுகளைப் போன்று, எல்லாம் அவசர அவசரமாக, பரபரப்பாக, அல்லது விரைவாக, எல்லாச் செயல்களும் நடைபெறுகின்றன. எனவே, நோயாளிகள் சொல்லுவதைக் கேட்கவோ, நோயின் தன்மை பற்றி அவர்களிடம் எடுத்துக் கூறவோ, என்ன வகையான சிகிச்சை அளிக்கிறோம், என்பதை விளக்கிடவோ, நேரம் இருப்பதில்லை; அல்லது நேரம் கிடைப்பதில்லை- இந்தப் பரபரப்பான உலகத்தில்!

ஒவ்வொரு டாக்டரும், அனுபவம் வாய்ந்த, நோய் பற்றிய வரலாற்று அனுபவம் கொண்டவர்களாக இருந்தபோது, நல்ல கேட்பாளர்களாக மனிதநேயம் மிகுந்தவர்களாக இருந்தனர். ஆய்வகப் பரிசோதனைகளின் துணையோடு, அனுபவத்தின் துணை கொண்டு, விவேகமான-விரைவான நோய் கண்டுபிடிப்புகளைச் செய்து, சிகிச்சைகளை மேற்கொண்டனர்.

தயவுசெய்து நீங்கள் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். நீங்கள் டாக்டராக இருப்பது உங்களுக்காக அல்ல! உங்கள் படிப்பில் பட்டங்களையும், உயர்வுகளையும், விருதுகளையும் பெற வேண்டும் என்பதற்காகவும் அல்ல! எவ்வளவு அமைப்புகளில் நீங்கள் உறுப்பினர்-தலைவர் என்ற தகுதிகளுக்காகவும் அல்ல! நிச்சயமாக இந்தத் தகுதிகளையெல்லாம் பெற வேண்டுமென்பது நல்ல நோக்கம்தான்.

ஆனால், நினைவில் கொள்ளுங்கள்! நீங்கள் விரும்பியவாறு, சிறந்த டாக்டரை இவைகளால் மட்டுமே உருவாக்கிட முடியாது. சமுதாய சேவை என்ற நோக்கமும், எதைச் செய்தாலும் முழுமனதுடன் ஈடுபாட்டோடு செய்திடும் ஆற்றலும், உங்களுக்குத் தேவை.

**"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்"**

நோய் என்ன? நோய்க்கான காரணம் என்ன ? நோய் தீர்க்கும் வழி என்ன? இவற்றை முறையாக ஆராய்ந்து சிகிச்சை செய்ய வேண்டும் என்று, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அய்யன் திருவள்ளுவர் கூறி இருக்கிறார்.

அரசு, திறமை வாய்ந்த உன்னத நோக்கமுடைய சுகாதார அமைப்பை, எல்லா வகையிலும் ஈர்க்கக் கூடிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

சுகாதாரக் கல்வி, நோய்த்தடுப்பு திட்டங்கள், நோய் குணமடைவதற்கான சேவைகள், இவையாவும் இன்றைக்கு, அளவிலும்-தரத்திலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளன.

அரசு, இன்றைக்கு சுகாதார அமைப்பை வலுப்படுத்தி, அறைகூவலாக ஏற்று, பரந்து விரிந்துள்ள தனியார் மருத்துவ நிறுவனங்களையும் இணைத்து; ஏழை எளிய மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில், கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம், மருத்துவத் துறையில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

அடிப்படையில், ஒரு எம்.பி.பி.எஸ் பயின்ற மருத்துவர் என்பவர், பொது மருத்துவப் பயிற்சி செய்பவராக, தனது தொழிலை நடத்தி வரவேண்டும். உங்களால் எல்லா நோய்களையும் கண்டுபிடிக்கவும், நாட்டிலுள்ள பொதுவான நோய்களுக்கெல்லாம், சிகிச்சை அளிக்கக் கூடியவராகவும், நீங்கள் விளங்கிட வேண்டும்.

இயன்ற நோய்களையெல்லாம், சிகிச்சை அளித்து தடுக்கவும், கட்டுப்படுத்தவும், குணப்படுத்தவும், தொற்றும்-தொற்றா நோய்களைக் கண்டுபிடித்து சிகிச்சை அளித்திடவும் வேண்டும். நிபுணர்களின் தேவை இருந்தால், நோய்களுக்கு ஏற்றவாறு அவர்களுக்கு அறிவுரை வழங்கிட வேண்டும்.

இந்தத் தொழிலை நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொண்ட பின்னர், நோயாளிகளுக்கெல்லாம், எல்லா சிகிச்சைகளையும் அளிக்க முன்வந்த பின்னர், நீங்கள் உங்கள் தொழிலில் ஆழ்ந்த தேர்ச்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும். நீங்கள் தைரியம் நிறைந்தவராக இருக்க வேண்டும். உறுதிமிக்கவராக, பரிவுமிக்கவராக, பணிவுள்ளவராக, மென்மையானவராக, பொறுமையுள்ளவராக, முக்கியத்துவம் வாய்ந்தவராக இருந்து; எதைச் செய்தாலும், நீங்கள் மகிழ்ச்சியோடு செய்ய வேண்டும். அப்படி இருந்தால் மட்டுமே, நீங்கள் உங்கள் நோயாளியை முழு மனதுடன் கவனிக்க முடியும். அதைத்தான் உங்களிடம் இந்த சமூகம் எதிர்பார்க்கிறது .

மனம் தளராதீர்கள்! இன்னும் இந்த உலகத்தில் சிறந்த துறை, சிறந்த தொழில் எது என்று கேட்டால், அது மருத்துவத் துறை–மருத்துவத் தொழில், என்றுதான் நான் உறுதியோடு கூறுவேன்.

முன்பின் அறியாத ஒரு நபர், மருத்துவரை நோக்கி வருகின்றார். பார்த்தமாத்திரத்தில் அந்நியோன்யம், பார்த்த மாத்திரத்திலேயே தன்னுடைய எல்லா இரகசியங்களையும், சொல்லு கின்றார். அவர் வேறு யாரிடமும் சொல்லாத இரகசியத்தைச் சொல்லுவார். அந்த அளவுக்கு டாக்டர்கள் மீது நம்பிக்கை! அறுவை சிகிச்சை செய்து, மருந்து கொடுக்கின்றீர். இந்த உறவும் நம்பிக்கையும், விலைமதிக்க முடியாத பரிசாகும். வேறு எந்தத் தொழில் புரிபவரும் இந்த சுகத்தை அனுபவித்திருக்க முடியாது.

நோயாளி சுகம் அடைவதை காணும்போது, ஒரு டாக்டர்தான் முதலில் மகிழ்ச்சி அடைகின்றார்! பிரசவம், சுகம் எனும்போது, கேள்விப்பட்டு, மகிழ்கின்றார். குழந்தை நலம் என்றால் மகிழ்கின்றார். அறுவைச் சிகிச்சை வெற்றி என்றால், முதலில் மகிழ்ச்சி பெறுபவர் மருத்துவர். உங்களுடைய பாடப் புத்தகங்கள், நீங்கள் கற்கும் முறைகள், இவற்றைக் கற்று தராமல் இருக்கலாம். உங்களுடைய கவனிப்பும் அனுபவங்களும், அதை பிரயோகப்படுத்துவதிலும் தான் நீங்கள் சிறப்பு மிகுந்த மருத்துவர்ஆகின்றீர்கள்.

❖ மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில், அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட வேண்டும் என்பது இந்த அரசின் கொள்கை.

தமிழ்நாட்டில் மொத்தம் **9** மருத்துவக் கல்லூரிகள் மட்டுமே இருந்தன.

**1998**–ல், நமது கழக ஆட்சியில் தான், முதல்முதலாக திருச்சிராப்பள்ளியில், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் பெயரில், ஒரு மருத்துவக் கல்லூரியைத் துவக்கி, அதன் பிறகு தூத்துக்குடி, கன்னியாகுமரி, வேலூர், தேனி என பல மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளது.

மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரி துவக்கப்பட வேண்டும் என்ற கருத்தினை மையமாகக் கொண்டு, கடந்த **4** வருடங்களில் விழுப்புரம், திருவாரூர், மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகள் துவங்கப்பட்டு, மாணவர்கள் சேர்க்கையுடன் திறம்பட நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

சென்ற வருடம் சிவகங்கை, பெரம்பலூர், மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் மருத்துவக் கல்லூரி துவங்குவதற்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவற்றில் இந்த ஆண்டு பெரம்பலூர் மற்றும் சிவகங்கை மருத்துவக் கல்லூரிகளில், தலா **100** மாணவர்கள் சேர்க்கையுடன், கல்லூரி துவங்குவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

மருத்துவக் கல்வித்துறையில், தனியார் துறையை ஊக்குவிக்கும் வகையில், தனியார் துறை மருத்துவக் கல்லூரி, பல்மருத்துவக் கல்லூரி, மருத்துவம் சார்ந்த படிப்புகளை நடத்துவதற்கு இருந்த தடையாணை நீக்கப்பட்டு, தனியார் துறையும் மருத்துவம், மற்றும் மருத்துவம் சார்ந்த கல்லூரிகளை துவக்குவதற்கு உத்தரவிடப் பட்டுள்ளது.

தலைவர் கலைஞர் அரசு, **2006**–ல் பதவி ஏற்றது முதல், இதுவரை **16** தனியார் மருத்துவக் கல்லூரிகள் துவங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

❖ “**மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரி**” என்னும் இந்த அரசின் நோக்கத்தைத் தொடர்ந்து நிறைவேற்றிடும் வகையில்; அடுத்தபடியாக இராமநாதபுரம், கடலூர் மற்றும் திண்டுக்கல்லிலும் அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட உள்ளது.

- ❖ பாரம்பரியம் மிக்க சித்த மருத்துவம், ஓமியோபதி மற்றும் பிற இந்திய மருத்துவத்தையும் வளர்த்தெடுக்க, தற்போதுள்ள ஆறு அரசு இந்திய மருத்துவ மற்றும் ஓமியோபதி கல்லூரிகளையும், இதுபோன்ற 26 தனியார் கல்லூரிகளையும் உள்ளடக்கி, தனியாக இந்திய மருத்துவ மற்றும் ஓமியோபதி பல்கலைக்கழகம் ஒன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்த ஆண்டு தொடங்கப்பட உள்ளது.

சுகாதாரத் துறையில், தமிழகம், இந்தியாவிலேயே முதல் மாநிலமாக உள்ளது என்பதை மிகப் பெருமையுடனும், அளவிலா மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- ❖ கழக ஆட்சியில் தான் மருத்துவம் பயிலும் பயிற்சி மருத்துவர்களுக்கும், முதுகலை பட்ட மருத்துவர்களும், பட்டய படிப்பு மருத்துவர்களுக்கும் கிட்டத்தட்ட அவர்கள் வாங்கிய ஊக்கத்தொகையைக் காட்டிலும், 3 மடங்கு அதிகமாக, முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டு, 1.7.2009 முதல், அனைத்து மருத்துவ மாணவர்களும் பயனடைந்து உள்ளார்கள், என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.
- ❖ மாண்புமிகு முதல்வர் கலைஞர் ஆட்சியில் தான், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மருத்துவர்களுக்கும், பணி உயர்வு வழங்கிடவும், அதற்காக கிட்டத்தட்ட 880 பணியிடங்கள் உருவாக்கி, ரூபாய் 118 கோடியே 6 இலட்சம் நிதி வழங்கப்பட்டு உரிய ஊதிய உயர்வு வழங்கிடவும், ஆணையிட்டு இன்றைய தினம், தமிழக அரசில் பணிபுரியும் அனைத்து மருத்துவர்களும், மற்ற மாநிலங்களில் வழங்கப்படும் ஊதியத்திற்கு இணையாக பெற்று வருகிறார்கள்.
- ❖ அரசு மருத்துவக் கல்லூரியானாலும் சரி, தனியார் மருத்துவக் கல்லூரியானாலும் சரி, மாணவர்கள் முதலாமாண்டுக்குப் பிறகு, மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளை பல்வேறு வகையில் கேள்விகள் கேட்டு பரிசோதித்து, அவர்களிடமிருந்துதான் மருத்துவம் கற்றுக் கொள்கிறார்கள் என்பது ஒரு நிதர்சனமான உண்மையாகும்.

  அதேபோல் நோயாளிகளும் தம்மை எத்தனை மாணவர்கள் சோதித்தாலும், எத்தனை முறை கேள்விகள் கேட்டாலும், தன்னை நிறைய எண்ணிக்கையில் மருத்துவர்கள் சோதிக்கிறார்கள் என்ற நம்பிக்கையில்தான், அவர்களும் ஒத்துழைக் கிறார்கள். அவ்வாறு ஒத்துழைக்கும் அந்த நோயாளிகளுக்கு, மருத்துவர்கள் நன்றி செலுத்திட ஒரே வாய்ப்பு, மருத்துவ பட்டம் பெற்ற பின்பு கிராமப்புறங்களிலும், அரசு மருத்துவமனைகளிலும், அல்லது தனியார் மருத்துவமனைகளிலும், வரும் நோயாளிகளுக்கு உரிய முறையில் சிகிச்சை செய்வதாகும்.

இன்றைக்குத் தமிழகத்தில், 17 அரசு மருத்துவக் கல்லூரிகளும், 9 சுயநிதி மருத்துவக் கல்லூரிகளும், 10 நிகர்நிலை பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரிகளும், மற்றும் வேலூர் கிருத்துவ மருத்துவக் கல்லூரியும் சேர்த்து தமிழகத்தில் 37 மருத்துவக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகளில் ஆண்டொன்றுக்கு 4,415 மருத்துவ மாணவர்கள் சேர்ந்து கல்வி பயில்கின்றனர்.

- ❖ முந்தைய ஆட்சியில் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு, 2005-06 ஆம் ஆண்டில் ரூபாய் 1487.11 கோடி மட்டுமே செலவிடப்பட்டது. தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில்

இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு,

- ❖ **2006-2007 ஆம் ஆண்டில் ரூபாய் 1612.17 கோடியாக உயர்த்தப்பட்டது.**

- ❖ **2007-2008 ஆம் ஆண்டில் ரூபாய் 2047.45 கோடியாகவும்,**
- ❖ **2008-2009 ஆம் ஆண்டில் ரூபாய் 2762.33 கோடியாகவும் உயர்த்தியது.**
- ❖ **2009-2010 ஆம் நிதி ஆண்டில் ரூபாய் 3391.33 கோடியும்,**
- ❖ **நடப்பு 2010-2011 ஆம் நிதி ஆண்டில் ரூபாய் 3,888.90 கோடியும் ஒதுக்கப்பட்டது.**

ஆண்டிற்கு ஆண்டு மக்கள் நலம் பேணிட மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு தொடர்ந்து கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**‘‘உற்றவன் தீர்ப்பான், மருந்துழைச் செல்வானென்**
**றப்பானாற் கூற்றே மருந்து’’**

நோயாளி, மருத்துவர், மருந்து, அருகிலிருந்து துணை புரிபவர், என மருந்து முறை நான்கு வகையாக அமைந்துள்ளது என்ற அய்யன் திருவள்ளுவர் வாக்கிற்கு ஒப்ப, இந்த மூவரது ஒத்துழைப்பும், மருந்தும் இருந்தால்தான், சிகிச்சைக்கு நல்ல பலன் கிட்டும். இவற்றை அனைவரும் உணர வேண்டும்.

மருத்துவப் பட்டத்தைப் பெற்றுள்ள நீங்கள், உங்கள் பணியைத் தொடங்கும்போது, நகரப் பகுதிகளில் மட்டுமல்லாது, கிராமப்புறங்களுக்கும் சென்று ஏழை எளியோர்க்கும் பணியாற்றுங்கள்.

**சுகாதாரத்தில், ஆரோக்கியத்தைப் பேணுவதில் சிகிச்சை அளிப்பதில், நாம் வெகுவாக முன்னேற்றம் அடைந்துள்ளோம். அதேபோன்று ஆராய்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளித்து, புதிய ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதற்கு, மக்கள் நல்வாழ்வுத் துறையும், மருத்துவத் துறை நிபுணர்களும் நடவடிக்கை எடுக்கவேண்டும்; அதற்கான முயற்சிகளில் ஆர்வத்துடன் ஈடுபட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.**

இந்த மருத்துவப் பல்கலைக் கழகத்தின் இலச்சினையில் “ **Health for All**” அதாவது “**அனைவருக்கும் ஆரோக்கியம்**” என்ற பொன்மொழியைப் பொறித்து இருக்கின்றீர்கள். இந்த பொன்மொழிக்கேற்ப, இதை நினைவிலே கொண்டு பணியாற்றுங்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன சில பொன்னான அறிவுரைகளை உங்களுக்கு நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

“Go to the People
Live among them
Learn from them
Love them
Serve them
Plan with them
Start with, what they know,
Build on, what they have”

மக்களிடம் செல்!
அவர்களுடன் சேர்ந்துவாழ்!
அவர்களிடமிருந்து அறிந்துகொள்!
அவர்களிடம் அன்பு செலுத்து!
அவர்களுக்குத் தொண்டுசெய்!
அவர்களுடன் திட்டமிடு!
அவர்களுக்கு எது தெரியுமோ,
அதிலிருந்து தொடங்கு!
அவர்களிடம் எது உள்ளதோ, அதைப்
பயன்படுத்தி அவர்கள் முன்னேறப் பாடுபடு!”

இந்தக் கருத்துக்களை உங்கள் இதயத்தில் தாங்கிச் செல்லுங்கள்; இந்த நாட்டிற்கும், வீட்டிற்கும் நல்வாழ்வுக்குத் தேவையான பயனுள்ள பணியினைத் தொடங்குங்கள் எனக் கேட்டு வாய்ப்பிற்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

***

**வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.**